
ஜமால் முகமது கல்லூரி

# நிறுவனர்கள்



ஹாஜி. M. ஜமால் முஹம்மது சாஹிப்



ஜனாப். N.M. காஜாமியான் ராவுத்தர்

JMC



Scanned with CamScanner

எனக்கு ஜமால் வெறும் கட்டிடமல்ல
ஒரு ஜீவ ஆலயம்
மனதுக்குள் ஆயிரம் முறை
நான் வணங்கும் திருவரங்கம்
நான் அதன் மடிப்பிள்ளை
அதைவிடப் பெருமை
வேறு எனக்கு இல்லை

**– கவிஞர் சிற்பி**
சாகித்ய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளர்
(ஜமால் முகமது கல்லூரி மேனாள் மாணவர்)

இன்று ஆல் போல் தழைத்து உயர்ந்து நிற்கும் நமது கல்வி – கோயிலான ஜமால், சாதாரண மத்தியதர அதனினும் குறைந்த வசதிமிக்கவர்களின்கடும் உழைப்பினால் வரலாறு படைத்தது. எனது இலக்கிய பயணத்தின் உன்னத விதைகள் அங்கேதான் பேராசான்களால் விதைக்கப்பட்டது. 2014–ல் சாகித்ய அகாடமியின் குழந்தைகள் இலக்கியத்திற்கான விருது – பெற்ற அந்த நிகழ்வில் நான் படித்த என் தாய் கல்லூரியான ஜமால் முகமது கல்லூரியின் பெயரை குறிப்பிட்டார்கள். கூடவே அகாடமியின் செயலர் சீனிவாச ராவ் ஜி ஜமால் முகமது கல்லூரியில் பயின்றவர்களில் வழங்கும் மூன்றாவது சாகித்ய அகாடமி விருதாளர் என என்னை குறிப்பிட்டார்.

– முனைவர் ஆயிஷா இரா. நடராசன்,
சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்
(ஜமால் முகமது கல்லூரி மேனாள் மாணவர்)

JMC

**வெளியீடு :**
**ஜமால் முகமது கல்லூரி**
இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்
திருச்சிராப்பள்ளி – 620 020.

ISBN
9 788194 432265

CS Scanned with CamScanner

ஜமால் முகமது கல்லூரி

# நிறுவனர்கள்


தொகுப்பாசிரியர்கள்

Dr.J. ராஜா முகமது

திரு. கா. முகமது இஸ்மாயில்

Dr. அ. அக்பர் உசேன்

Dr. H. E. சையத் முகம்மது

திரு. து. பிரபாகரன்

Dr. அ. சையத் ஜாகீர் ஹசன்

Dr. Y. பர்வேஷ் ஷெரிப்

Dr. க. சிராஜுதீன்

திரு. பா. சிராஜுதீன்

Dr. சு. விஜயலெட்சுமி


JMC


வெளியீடு

**ஜமால் முகமது கல்லூரி**

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

# 7, ரேஸ் கோர்ஸ் ரோடு, காஜா நகர்,

திருச்சிராப்பள்ளி - 620 020.

✆ 0431 - 2331135, 0431 - 2331235


Scanned with CamScanner

ஜமால் முகமது கல்லூரி நிறுவனர்கள்
© வெளியீட்டகத்திற்கு

முதற்பதிப்பு - பிப்ரவரி 2020

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | ஜமால் முகமது கல்லூரி<br>இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு<br>ஆய்வு மையம்<br># 7, ரேஸ் கோர்ஸ் ரோடு, காஜா நகர்,<br>திருச்சிராப்பள்ளி - 620 020.<br>☎ 0431 - 2331135, 0431 - 2331235 |
| அச்சிட்டோர் | : | டீக்யூ பிரஸ், திருச்சி - 20. |
| ISBN | : | 978-81-944322-6-5 |
| விலை | : | ரூ.150/- |

Scanned with CamScanner

Tel. No. : 0431 - 2331135

Fax : 0431 - 2331035
0431 - 2331435
P.B.No. : 808

# JAMAL MOHAMED COLLEGE

(Autonomous)
College with Potential for Excellence
Since 1951
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star Scheme & DST - FIST Funded | (Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, Tamil Nadu, India.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

**Dr. A.K. காஜா நஜீமுதீன்**
செயலர் மற்றும் தாளாளர்



## வாழ்த்துரை

'தாலாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தல் பொருட்டு' என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, இஸ்லாமிய நெறி நின்று தான் ஈட்டிய பொருளை தனது சந்ததியினருக்கு மட்டுமே விட்டுவிடாமல், கல்விச்சாலைகள் மூலம் சமுதாயத்தையும் மேம்படுத்த வேண்டுமென்ற பெரிய நோக்கத்துடன் எங்களது பாட்டனார் மேன்மைமிகு காஜாமியான் ராவுத்தர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் 1951–ல் தொடங்கிய ஜமால் முகமது கல்லூரி ஆயிரக்கணக்கானவர்களுக்கு அறிவொளியை ஏற்றி வைத்து அவர்களது குடும்பங்கள் வளமுடன் வாழ வழிவகுத்துள்ளது.

தன்னலம் பாராத இந்தக் கொடையாளர்கள் தனக்குச் சொந்தமான சுமார் 120 ஏக்கர் நிலத்தை கல்லூரி தொடங்க அளித்து, தமிழகத்தின் மற்றுமொரு கொடையாளியான ஹாஜி ஜமால் முகமது சாஹிப் அவர்களின் பெயரை கல்லூரிக்குச் சூட்டி அழகுபார்த்திருப்பது அந்த வள்ளலின் மகுடத்தில் மற்றுமொரு வைரக்கல்.

இன்று 12,000–க்கும் மேற்பட்டவர்கள் உயர்கல்வி பெறுவதற்குக் காரணமாகத் திகழும் வள்ளல்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளைத் தொகுத்து நூலாக வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அனைவரும் படித்து பயன்பெற வேண்டுமென்பது நமது அவா.

**Dr. A.K. காஜா நஜீமுதீன்**
செயலர் மற்றும் தாளாளர்



Scanned with CamScanner

Tel. No. : 0431 - 2331135

Fax : 0431 - 2331036
0431 - 2331435
P.B.No. : 808

JAMAL MOHAMED COLLEGE
(Autonomous)
College with Potential for Excellence
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star Scheme & DST - FIST Funded | (Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, Tamil Nadu, India.
Since 1951

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu



ஹாஜி **M.J. ஜமால் முஹம்மது**
பொருளாளர்

# வாழ்த்துரை

வாழ்ந்தவர் கோடி. ஆனால் மக்கள் மனதில் நிற்பவர்கள் சிலர் மட்டுமே. அந்த வரிசையில் என்றும் மக்களின் மனதில் நிலைபெற்றிருப்பவர்கள் வள்ளல் ஹாஜி ஜமால் முகமது சாஹிப் மற்றும் காஜாமியான் ராவுத்தர் ஆகியோர். ஏழைக்கு எழுத்தறிவித்தல் இறைப்பணியாகும் என்பதற்கேற்ப ஜமால் முகமது அவர்கள் சென்னையில் ஜமாலியா அரபிக் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி, இஸ்லாமிய கல்வி பலருக்கும் எளிதில் கிடைக்க ஆவனச் செய்தார். தொடர்ந்து தனது நண்பர் வள்ளல் காஜாமியான் ராவுத்தர் அவர்களுடன் இணைந்து ஒரு கல்லூரி தொடங்கும் திட்டம், அவருக்குப்பின் அவரது மகனார் எம்.ஜே.ஜமால் மொகிதின் அவர்களாலேயே நிறைவேற இறையருள் கிட்டியது. 1951–ல் தொடங்கப்பட்ட கல்லூரிக்கு வள்ளல் ஜமால் முகமது அவர்களின் பெயரைச் சூட்டியது பெருமைக்குரியதாகும்.

ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைக்கக் காரணமாக இருக்கும் ஜமால் முகமது கல்லூரியின் நிறுவனர்கள் இருவரது வாழ்க்கை வரலாறு கூறும் இந்த நூலினை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

ஹாஜி **M.J. ஜமால் முஹம்மது**
பொருளாளர்

Tel. No. : 0431 - 2331135

Fax : 0431 - 2331035
0431 - 2331435
P.B.No. : 808

Since 1951

# JAMAL MOHAMED COLLEGE

(Autonomous)
College with Potential for Excellence
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star Scheme & DST - FIST Funded | (Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, Tamil Nadu, India.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

முனைவர் **K. அப்துஸ் சமது**
துணைச் செயலாளர்



## வாழ்த்துரை

முன்னோர் வரலாறு நிகழ்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியாக அமையும். எங்களது முன்னோர் கொடைவள்ளல் காஜாமியான் ராவுத்தர் அவர்களும், மற்றுமொரு வள்ளலான ஜமால் முகமது சாஹிப் ஆகிய இருபெரும் மனிதர்களின் நற்சிந்தனையில் உதித்ததுதான் இந்த ஜமால் முகமது கல்லூரி. கல்வி, அதிலும் உயர்கல்வி அனைவருக்கும் தடையின்றிக் கிடைக்கவேண்டி தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரி தனது பணியினை செவ்வனே செய்து வருகிறது.

ஜமால் முகமது கல்லூரி அமைய காரணமான வள்ளல்கள் என்.எம். காஜாமியான் ராவுத்தர் மற்றும் வள்ளல் ஜமால் முகமது சாஹிப் ஆகிய இருவரின் வாழ்க்கை வரலாறு இந்த நூலில் பல கட்டுரைகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வளர்ந்து வரும் தலைமுறையினர் நூலைப் படித்து வள்ளல்களின் அறப்பணியினைப் போற்றுவதோடு அவர்களது அடிச்சுவட்டில் பயணிப்பதும் சமுதாயம் பீடு நடைபோட ஏதுவாகும். இந்த நூலைச் சிறப்பாக ஆக்கிக் கொடுத்திருக்கும் ஆசிரியர் குழுவினரைப் பாராட்டுகிறேன். வையகம் உள்ளவரை வள்ளல்களின் புகழ் வாழ இறையருள் வேண்டுகிறேன். வாழ்த்துக்கள்.

K. Abdus Samad

முனைவர் **K. அப்துஸ் சமது**
துணைச் செயலாளர்

Tel. No. : 0431 - 2331135

Fax : 0431 - 2331034
0431 - 2331435
P.B.No. : 808


# JAMAL MOHAMED COLLEGE

Since 1951

(Autonomous)
College with Potential for Excellence
Accredited (3rd Cycle) with 'A' Grade by NAAC
DBT Star Scheme & DST - FIST Funded | (Affiliated to Bharathidasan University)
TIRUCHIRAPPALLI – 620 020, Tamil Nadu, India.

Website : www.jmc.edu
Email : principaljmc@ymail.com / princi@jmc.edu

முனைவர் **S. இஸ்மாயில் முகைதீன்**
முதல்வர்



# வாழ்த்துரை

கல்வி அழிவில்லாத செல்வமாகும். அதனைப் பிறருக்கு அளிப்பது மிகப்பெரிய அறமாகும். வறுமையிலும், அறியாமையிலும் மூழ்கிக்கிடந்த மக்களைத் தட்டி எழுப்ப கல்வி ஒரு சாதனமாகும். கல்வி பரவலாக்கப்படாத காலமது. வசதி படைத்தவர்கள், சமுதாயத்தில் உயர் அந்தஸ்து உடையவர்களுக்கே கல்வி கிடைத்துக் கொண்டிருந்த நிலையைக் கண்டு மக்கள் அனைவரும் சாதிமத பேதமின்றி உயர்கல்வி கற்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் இருபெரும் வள்ளல்களான ஹாஜி ஜமால் முகமது சாஹிப் அவர்களும் ஜனாப் காஜாமியான் ராவுத்தர் அவர்களும் ஜமால் முகமது கல்லூரி துவங்க முயன்று 1951–ல் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று சுமார் 12,000 மாணவ மாணவிகளுக்கு தரமான உயர்கல்வி அளித்து வருகிறது.

பெருமைக்குரிய இந்த இருபெரும் வள்ளல்களின் வாழ்க்கை வரலாறு, அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தவர்களின் நினைவலைகள், இக்கல்லூரியில் பயின்று வாழ்வில் உன்னத நிலையடைந்த பழைய மாணவர்களின் பசுமை நிறைந்த கடந்த காலம் போன்ற அருமையான செய்திகளை உள்ளடக்கிய இந்த நூலினை எமது கல்லூரியின் சார்பாக வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இளைய தலைமுறையினர் படித்து அறிந்து கொள்ள வேண்டிய நூல். இதனைத் தொகுத்து வழங்கியுள்ள குழுவினருக்குப் பாராட்டுகள்.

முனைவர் **S. இஸ்மாயில் முகைதீன்**
முதல்வர்



Scanned with CamScanner

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | சமூகச் சிந்தனையாளர் வள்ளல் ஜமால் முகமது<br>– முனைவர் ஜெ. ராஜா முகம்மது | – | 9 |
| 2 | காலத்தை வென்று நிற்கும் காவியம்<br>வள்ளல் காஜாமியான் – முனைவர் ஜெ. ராஜா முகம்மது | – | 32 |
| 3. | அறம் காக்கும் கல்வியின் இரண்டு கண்கள் –<br>ஒரு வரலாற்றுப் பார்வை –<br>– முனைவர் ஆயிஷா இரா. நடராசன் | – | 46 |
| 4 | தென்னிந்தியாவின் வர்த்தக இளவரசர்<br>ஹாஜி.எம்.ஜமால் முஹம்மது சாகிபு பஹதூர்<br>– சேயன் இப்ராஹிம் | – | 56 |
| 5 | தம்பி எஜமான்<br>– முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதம் | – | 68 |
| 6 | வள்ளல் ஜமால் முகம்மது<br>– பேராசிரியர் இ.ப. முகம்மது இஸ்மாயில் | – | 73 |
| 7 | வள்ளல் காஜாமியான்<br>– பெரும்புலவர் முனைவர் சி. நயினார் முகம்மது | – | 81 |
| 8 | வள்ளல் ந.மு.கா.<br>– பேராசிரியர் முனைவர் தா. பிச்சை முகம்மது | – | 88 |
| 9 | மனிதருள் மாணிக்கம் ஜமால் முஹம்மது இராவுத்தர்<br>– பா. சிராஜுத்தீன் | – | 93 |
| 10 | திருச்சி கண்ட சீதக்காதி<br>– ஹாஜி இஸ்மாயில் நசீருத்தீன் | – | 100 |
| 11 | ஜமால் முகம்மது ராவுத்தரின் வரலாற்றுச் சுவடுகள்<br>– ஹாஜி எம்.ஜே. ஜமால் முகம்மது சாகிப் | – | 107 |
| 12 | குர்ஆன் கருத்துப் பரப்புரையில்<br>கல்லூரி நிறுவனர்களின் பங்களிப்பு<br>– முனைவர் மீ.அ.ச. ஹபீபுர் ரஹ்மான் | – | 134 |
| 13 | பல்துறை வித்தகர் – ஜமால் முஹம்மது<br>– பேராசிரியர் A. அஷரப் அலி | – | 144 |
| 14 | ஹாஜியார் ஜமால் முகம்மது<br>– பேராசிரியர் பீ. அஹமத் பாஷா | – | 154 |




Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| 15 | Contribution of Jamal and N.M. Family in the promotion of Education in Madras and Trichy<br>- M.J. Jamal Mohamed | – | 164 |
| 16 | Khajamian Rowthar - A Titan among Tanners<br>- Prof. K. Abdullah Basha | – | 178 |
| 17 | Life and Achievement of Haji Jamal Mohamed Sahib Founder of Jamal Mohamed College<br>- M.J. Jamal Mohamed | – | 182 |
| 18 | Tribute to Jamal Mohamed Family<br>- Haji Dr. I.S.A. Nather Khan | – | 190 |
| 19 | Reserve Powers for Currency and Exchange<br>- Janab M. Jamal Mohamed Sahib | – | 207 |
| 20 | The Great Valuable Visionaries : Founders of Jamal Mohamed College<br>- Dr. S. Ismail Mohideen | – | 208 |
| 21 | The Vision and Mission of Hajee M. Jamal Mohamed Sahib and Janab N.M. Kajamian Rowther<br>- Dr. J. Augustin | – | 214 |
| 22 | வாழிய ஜமால்<br>கவிஞர். அபிவை தாஜுதீன் | – | 219 |
| 23 | வையம் உள்ளளவும் வாழும் வள்ளல்<br>– காஞ்சி அப்துல் ரவூப் பாகவி | – | 220 |
| 24 | காஜாமியான் என்றொரு ஞானச் சூரியன்<br>– பேராசிரியர் முனைவர் பீ.மு. மன்சூர் | – | 222 |
| 25 | ஹாஜி ஜமால் முகம்மது சாகிப்<br>– முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன் | – | 224 |
| 26 | கான்சாகிப் காஜாமியான் அவர்கள்<br>– முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன் | – | 226 |
| 27 | கலாலயம் தந்த கனவான்கள்<br>–S. உமர் பாருக் | – | 228 |




Scanned with CamScanner